# கிளாலி புனித யாகப்பர் ஆலயம்: கிறிஸ்தவ சமூக உருவாக்கப் பாரம்பரியம் பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வை

**மா. அருள்ஸ்ரீபன், ச. மேரி வினிபிரிடா**
ssteepan08@gmail.com, winifreeda@univ.jfn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

சமயங்கள் மனிதனுடைய அன்றாட வாழ்வியலுடன் இரண்டறக் கலந்துவிட்டதாகக் காணப்படுகின்றன. நாடோடிகளாக அலைந்து திரிந்த மனிதர்களை ஒன்றிணைத்து சமூகமாக உருவாக்குவதில் சமயங்களும் சமயத் தளங்களான ஆலயங்களும் பிரதான பங்கினை வகித்து வருகின்றன. ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்னரான காலப்பகுதிகளில் இருந்து பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திற்குட்பட்ட கிளாலிக் கிராமத்தில் அமைக்கப்பட்ட புனித யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்தி கிறிஸ்தவ சமூக உருவாக்கம் நடைபெற்றுள்ளது. சமூக உருவாக்கமானது குறிப்பாக வழிபாடுகள், கிறிஸ்தவக் கலைகள், கிறிஸ்தவ சடங்குகள், கலாசார அம்சங்கள் என்பவற்றின் மூலம் இடம்பெற்றுள்ளது. ஆய்வானது கிளாலி புனித யாகப்பர் ஆலயம் போர்த்துக்கேயர் காலந்தொடக்கம் இன்று வரை கிறிஸ்தவ சமூக உருவாக்கப் பாரம்பரியத்தில் எவ்வாறான பங்களிப்பினை வழங்கி வருகின்றது என்பதை வெளிக்கொணருதல் என்னும் பிரதான நோக்கத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக கிளாலியில் வாழ்ந்த மக்களுடைய விசுவாசம், ஆலயத்தினை மையப்படுத்தி நடைபெற்ற தேர்ப் பவனி மற்றும் ஏழு கூட்டுப் பவனி, திறமையான கலைஞர்கள், மக்களிடையே காணப்பட்ட ஒற்றுமை என்பன சமூக உருவாக்கத்திற்கு வளமூட்டிய விடயங்களாக அமைகின்றன. எனினும் அண்மைக் காலங்களில் சமூக உருவாக்கங்கள் வலுவிழந்து செல்கின்றமையினை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இக் கிராமத்தில் இடம்பெற்ற நீண்டகால இடப்பெயர்வு, மக்களுடைய விசுவாச வாழ்வில் ஏற்பட்ட தளர்ச்சி, ஆலயத்தினை மையப்படுத்தி நடைபெற்ற சடங்குகள் நடைபெறாமை, இளைஞர்களின் பங்களிப்புக்கள் குறைந்தமை போன்றவை சமூக உருவாக்கங்களின் வலுவிழப்பிற்குக் காரணிகளாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் நேர்காணல், களஆய்வு என்பவற்றின் மூலம் அவதானிப்பு முறையும், நூல்கள், ஆய்வேடுகள், சஞ்சிகைகளில் பெறப்பட்ட தரவுகள் தொகுத்தறிவு முறையினூடகவும் பெறப்பட்ட தரவுகள் ஒப்பிட்டாய்வு மற்றும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. எனவே இவ் ஆய்வுப் பிரச்சனைக்குப் பொருத்தமான பரிந்துரைகளை முன்வைப்பதன் மூலம் வலுவிழந்து செல்லும் சமூக உருவாக்கங்களை மீளுருவாக்கம் செய்யவும் அதன் நீடித்த நிலைத்திருப்பிற்கும் உதவவும் முடியும் என்பதை ஆய்வு எடுத்துரைக்கின்றது.

**திறவுச்சொற்கள்:** கிளாலி, சமூக உருவாக்கம், கிறிஸ்தவம், யாகப்பர் ஆலயம், சடங்குகள்

## ஆய்வு அறிமுகம்

ஆய்வு என்பது மனித அறிவை முன்னோக்கிக் கொண்டு செல்லவும் ஒரு கற்கை நெறியினை முழுமையாகப் புரிந்து கொள்ளவும் ஒழுங்கமைக்கப்பட்ட தேடல் சார்ந்த கற்கை நெறியாகும். கி.பி.16ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் அதிகாரப் பூர்வமாக இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கிறிஸ்தவமானது இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதாரத்தில் கணிசமான அளவு தாக்கம் செலுத்தியுள்ளமையினை அவதானிக்கலாம். நாடோடிகளாக அலைந்து திரிந்த மனிதர்கள் காலப் போக்கில் குழுக்களாக இணைந்து வாழத் தொடங்கினர். இம் மாற்றமானது சமூக உருவாக்கத்தினுடைய அடிப்படையாக அமைந்தது. சமூக உருவாக்கம் என்பது குறிப்பிட்டதொரு மக்கள் குழு முறையான அமைப்புப் பெற்ற கட்டுக்கோப்புடன் ஒரு சமூகத்தில் இணைந்து கொள்வதற்கு எடுக்கும் முயற்சியினைக் குறிக்கின்றது (றமீஸ்,2016:17). அவ்வகையில் பொதுவாகக் குறிப்பிட்டதொரு இடத்தில் காணப்படுகின்ற பாடசாலை, ஆலயம் போன்ற சமூக நிறுவனங்களை மையமாகக் கொண்டே சமூக உருவாக்கங்கள் நடைபெறுகின்றன. சமயங்கள் மற்றும் ஆலயங்களே சமூக உருவாக்கத்தில் மிக முக்கிய பங்கினை வகித்துள்ளன (கோணேஸ்வரன், 1992: 63). இலங்கைக்கு வருகை தந்த போர்த்துக்கேயர்களால் ஆரம்ப காலங்களில் வட பகுதியில் அமைக்கப்பட்ட மிகப் பழமையான கிறிஸ்தவ ஆலயங்களுள் ஒன்றாகக் கிளாலி புனித யாகப்பர் ஆலயம் காணப்படுகின்றது. இவ் ஆலயத்தினை மையப்படுத்தி போர்த்துக்கேயர் காலம் முதற்கொண்டு இன்றுவரை கிளாலிக் கிராமத்திலே கிறிஸ்தவ சமூக உருவாக்கங்கள் நடைபெற்றுள்ளன. எனவே அச் சமூக உருவாக்கங்கள் தொடர்பாகவும் அவற்றினுடைய இன்றைய நிலை தொடர்பாகவும் வரலாற்றுக் கண்ணோட்டத்திலான தேடலாக இவ் ஆய்வு காணப்படுகின்றது.

## கிளாலிக் கிராமமும் சமூக உருவாக்கமும்: பொது அறிமுகம்

வட இலங்கையின் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவிற்குள் உள்ளடங்கும் கிராமமே ‘கிளாலி’ ஆகும். யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையில் அமைந்துள்ள இக் கிராமம் மூன்று பக்கம் நிலத்தினாலும் ஒரு பக்கம் கடலாலும் சூழப்பட்டுள்ளது. மருத நிலமும் நெய்தல் நிலமும் ஒருங்கே அமையப்பெற்றுள்ள ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது. நடைபெற்று முடிந்த உள்நாட்டு யுத்தத்தினால் உருக்குலைக் கப்பட்ட கிராமமானது இன்றும் போரின் எச்சங்களைச் சுமந்தபடி காணப்படுகின்றது. துறைமுகப் பகுதியினைக் கொண்டுள்ள இக் கிராமமானது போர்த்துக்கேயர்களுடைய ஆட்சிக் காலத்தின் பின்னரே வரலாற்று இலக்கியங்களில் இடம் பிடித்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும் (றோச், 2021: 30).

உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் மனிதர்கள் அவ்வுறவுகளை நிலைப்படுத்தி, முறைப்படுத்தித் தங்களுக்குள் ஓர் அமைப்பை, அனைவரும் கூடி வாழக்கூடிய நிலையினை ஏற்படுத்திக் கொள்ளும் போது ‘சமூகம்’ பிறக்கின்றது (கோணேஸ்வரன், 1992: 78). ஒரு குறிப்பிட்ட இனம் அல்லது மக்கள் குழு தமக்குள் ஒன்றுபட்டு ஒரே விதமான கட்டமைப்புக்குள் இயங்கும் நிறுவன ரீதியான அமைப்பை இது குறிக்கும். மனிதர்கள் தேவையின் காரணமாகத்தான் தங்களுக்குள் ஒரு சமூக அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு கூடி வாழ்கிறார்கள். இக்கருத்தையே பிளேட்டோ என்ற அறிஞரும் வலியுறுத்துகின்றார். (கோணேஸ்வரன், 1992: 78). இவ்வாறே

புனித தோமஸ் அக்குவைனஸ் என்ற அறிஞர் "மனிதன் தன்னுடைய பற்றுக் களைத் தனித்திருந்து தன்னிச்சையாக அடையமுடியாது. பிறருடைய துணை மற்றும் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே அடைய முடியும். எனவே இவற்றைப் பெற மனிதன் பிறரோடு சேர்ந்து சமூகத்தை அமைத்துக் கொள்கின்றான்." எனக் கூறியுள்ளார் (கோணேஸ்வரன், 1992: 78).

வரலாற்றின் தொடக்கத்தில் மனிதர்கள் தனித்தனியாகவே வாழ்ந்து வந்துள்ளனர். வேட்டையாடுதலே பிரதான ஜீவனோபாய மாகக் காணப்பட்டுள்ளது. இந் நிலையில் நாடோடி வாழ்க்கை முறையே அக் காலத்தில் பரவலாக அமையப் பெற்றிருந் துள்ளது. இதனால் சமூக அமைப்பு ஒன்று அக் காலப்பகுதிகளில் உருவாக்கம் பெறவில்லை. எனினும் காலப்போக்கில் மனிதன் சிந்திக்க முற்பட்டுக் கொண்டான். சிந்தித்தமையின் விளைவாக மனித வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக மனித வாழ்வில் நாகரிகத் தினுடைய தோற்றமும் வளர்ச்சியும் ஆரம்ப மானது. இதன் விளைவாக தனித்தனியாக வாழ்ந்த மனிதர்கள் குழுக்களாக வாழ ஆரம்பித்தனர். குழுக்களாக வாழ்ந்த போது அவர்களுக்குள் முரண்பாடுகளும் பிரச்சினைகளும் எழ ஆரம்பித்தன. எனவே குழுக்கள் மத்தியில் தலைவர்கள் உரு வாக்கப்பட்டனர். முறையான இனப்பெருக்க வாழ்வியல் முறைகள் உருவாக்கப்பட்டன. குறிப்பாக ஆணும் பெண்ணும் இணைந்து திருமண உறவினை ஏற்படுத்திக் கொண்டனர். திருமணம் குடும்பங்களை உண்டாக்கியது. திருமணத்தின் மூலம் புதியதொரு சந்ததி உருவாக்கப்பட்டது. மேலும் மக்களுடைய வாழ்வியலைக் கட்டமைப்பிற்குள் கொண்டு வரவும் ஒழுங்கமைக்கவும் வேண்டிய தேவை உண்டானது. இதனால் 'சமயங்கள்' தோற்றுவிக்கப்பட்டன. சமயங்களினுடைய போதனைகள் மனிதர்கள் மத்தியில் இறை அச்சத்தினையும் ஒழுக்கத்தினையும் கொடுத்தன. சமயங்களையும் சமய நிறுவனங்களையும் தொடர்ந்து 'கல்வி' நிலையங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றின் மூலம் வாழ்வியல் முறைகள் கற்றுக் கொடுக்கப்பட்டன. இவை மக்கள் குழுக்களை நாகரிகமான சமூகமாக மாற்றுவதற்கு உதவின. நாடோடிகளாக அலைந்து திரிந்த மக்களை, கட்டமைப்பிற்குள் உள்ளடக்குவது இலகுவானதாக அமையவில்லை. இதனால் ஆன்மீகம் மற்றும் கல்வியினை விட வேறு பல தேவைகளும் ஏற்பட்டுக் கொண்டன. எனவே அவ்வாறான அனைத்துத் தேவைகளையும் ஒன்றிணைத்து மக்கள் குழுக்கள் ஒரு 'சமூகமாக உருவாக்கம்' பெற்றுக் கொண்டன. இவ்வாறு மக்கள் குழுக்களைச் சமூகங்களாக உருவாக்கம் செய்வதற்குப் பங்களிப்புச் செய்யும் காரணிகள் பல உள்ளன (கோணேஸ்வரன், 1992: 102).

'திருமணமும் குடும்பமுமே' சமூக உருவாக் கத்தினுடைய முக்கியமான கருவிகளாக அமைகின்றன. குடும்பமே சமூகத்தினுடைய அடிப்படை அலகாக அமைகின்றது. பல்வேறு குடும்பங்கள் இணைந்து உருவாக்குகின்ற ஒரு கூட்டு நிறுவனமே சமூகம் ஆகும். பெற்றோர்களிடம் இருந்து சிறுவர்கள் பேசவும் மொழியைக் கற்றுக்கொள்ளவும் சமூகத்தின் ஒழுக்க நெறிகளைத் தெரிந்து கொள்ளவும் மூத்தவர்களிற்கு மரியாதை செலுத்தவும் கற்றுக் கொள்கின்றனர். கூட்டுறவு, சகிப்புத்தன்மை, தியாக மனப் பான்மை, அன்பு, பாசம் போன்ற சில பண்புகளைக் குழந்தைகள் குடும்பத்தினரிட மிருந்து கற்றுக்கொள்கின்றனர். குடும்பத்தின் சூழ்நிலையானது குழந்தையின் ஆளுமை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றது. குடும்பங்களில் இருந்து பெற்றுக்

கொள்ளப்படுகின்ற மேற்கூறப்பட்ட பண்புகளே சமூகத்தின் உருவாக்கத்திற்கும் அடிப்படையாக அமைகின்றன (கோணேஸ்வரன், 1992: 61).

ஒரு சமூகத்தினுடைய உருவாக்கத்தில் 'சமயமும் வழிபாட்டிடங்களும்' பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மனித வாழ்வில் வழிபாட்டு முறைகள், சமய சடங்குகள், கொண்டாட்டங்கள் என்பன பிரதான இடத்தினைப் பெறுவதாகக் காணப்படுகின்றன. குறிப்பாக மனிதர்களுடைய பிறப்பு, இறப்பு, திருமணம் எனப் பல கட்டங்களிலும் சமயம் கணிசமான பங்கை வகிக்கின்றது. சமய வழிபாடுகளில் பங்கு பெறுதல், பிரார்த்தனைகளில் ஈடுபடுதல் என்பன மனிதர்களிடத்தே பல வகைத் தொடர்புகளை ஏற்படுத்துகின்றன. ஆலயங்களுக்கு அருகில் மக்கள் குடியிருப்புக்களை ஏற்படுத்திக் கொண்டனர். இதனால் தம்முடைய ஒவ்வொரு அசைவுகளையும் மனிதர்கள் மிகவும் அவதானத்துடன் ஆலயங்களை மையமாகக் கொண்டு மேற்கொண்டனர். வழிபாடுகளை மேற்கொள்வதற்கு ஆலயங்களில் ஆன்மீகத் தலைவர்கள் உருவாக்கப்பட்டனர். அவர்களின் போதனைகளும் அறிவுரைகளும் மக்களை நல்வழிப்படுத்துவதாக அமைந்தன. இதனால் மக்கள் ஆன்மீகத் தலைவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக வாழ ஆரம்பித்தனர். இக் கட்டுக்கோப்பான வாழ்க்கை முறை ஒழுக்கவியலைத் தோற்றுவித்தது. சமயங்களும் ஆலயங்களும் ஒருவித கட்டுக்கோப்புள்ள மக்கள் குழுவை உருவாக்கியது. இம் மக்கள் குழுக்களே சமூகங்களாக மாற்றம் பெற்றுக் கொண்டன (கோணேஸ்வரன், 1992: 63).

மேலும் சமூக உருவாக்கத்தில் 'பாடசாலைகளின்' பங்கு மிக அதிகமாகக் காணப்படுகின்றது. பாடசாலைகள் வெறுமனே கல்வி நிறுவனங்களாக மட்டும் நோக்கப்பட முடியாதவையாக அமைகின்றன. பாடசாலைகள் குழந்தைகளிற்குக் கல்வியோடு மட்டுமன்றி உயர்ந்த கருத்துக்கள், மனப்பான்மை என்பவற்றினைப் பெறவும் உதவுகின்றன. மேலும் குழந்தைகளைச் சிறந்த குடிமக்களாக உருவாக்குகின்ற நிறுவனங்களாக இப் பாடசாலைகளே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் (கோணேஸ்வரன், 1992: 62).

சமூக உருவாக்க முயற்சிகளில் பங்களிப்புச் செய்யும் அம்சங்களுள் ஒன்றாக 'இயற்கைச் சூழல்' காணப்படுகின்றது. மனித வரலாற்றில் இயற்கைச் சூழல் பெரிதளவில் முக்கியம் பெற்றுள்ளமையினை அறிய முடியும். காடுகளிலே வாழ்ந்த ஆரம்பக்கால மனிதர்கள் அங்குக் காணப்பட்ட இயற்கைச் சூழலுக்கு ஏற்றவாறு தம்மைத் தயார் செய்து கொண்டனர். முறைப்படுத்தப்பட்டதொரு சமூக அமைப்பு உருவாக்கப்பட்டது. தெடர்ந்து வந்த காலங்களிலும் சூழல் தேவைக்கு ஏற்ப சமூக உருவாக்கம் எழுந்துள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும் (கோணேஸ்வரன், 1992: 49-51).

**கிளாலி புனித யாகப்பர் ஆலயம்**

கிளாலிப் பகுதியில் முதன்முதலாக அமைக்கப்பட்ட ஆலயமாகவும் வட இலங்கையில் அமைக்கப்பட்ட பழமையானதொரு கத்தோலிக்க ஆலயமாகவும் இது காணப்படுகின்றது. இவ் ஆலயத்தினுடைய பின்னணியை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலங்களில் உற்றுநோக்கலாம். ஆலயமானது கி.பி. 1620-1628 வரையான காலப்பகுதிகளில் அடியிடப்பட்டிருக்கலாம் என சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளமையினைக் கருத்திற் கொண்டு (Gnanaprakasar, 1999: 202) போர்த்துக்கேயரின் ஆளுகை இலங்கையில் இடம்பெற்றபோது ஆலயமானது

அமைக்கப்பட்டுள்ள மையினை அறிய முடிகின்றது. 2021 ஆம் ஆண்டு வெளியிடப் பட்ட ‘கிளாலி மகிமையின் சுவடு’ என்னும் நூலிலுள்ள ஆசியுரை குறிப்பில், இயேசு சபைக் குருவான வணக்கத்திற்குரிய பிறே பெற்றேடி வெற்றங்கோர் சுவாமியவர்களால் சிறியதொரு குருசுக் கோயில் கிளாலியில் அமைக்கப்பட்டதாகவும், பிறே வெற்றங் கோர் அடிகளார் கிளாலி மக்களினுடைய வழிபாட்டிற்கு என போர்த்துக்கல் நாட்டி லிருந்து மரத்தாலான புனித யாகப்பருடைய திருச்சொரூபம் ஒன்றினை வரவழைத் துள்ளார் எனவும், குறித்த மரச் சொரூபமானது இடப்பெயர்வுக்கு முன்னரான காலப்பகுதி வரையிலும் இவ் ஆலயத்தில் காணப்பட்டதாகவும் யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் கிளாலியைச் சார்ந்த 84 வயதுடைய ஸ்ரனிஸ்லோஸ் என்பவர் “அந்தக் காலத்தில வெள்ளைக்கார சுவாமிமார் வெளிநாட்டிலயிருந்து மரச்சொரூபம் ஒண்டு கொண்டுவந்து இந்தக் கோயில்ல வைச்சவயள்.” எனக் குறிப்பிடும் நேர்காணல் தரவும் மேற்கூறிய விடயத்தை மேலும் வலுப்படுத்துவதாக அமைந் துள்ளது. எனினும் இம் மரச் சொரூபமானது மீள்குடியேற்றத்தின் பின்னர் ஆலயத்தில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். இவ் ஆலயத்தினை மையப் படுத்தி உருவாக்கப்பட்ட ‘சந்தியோகு மாயோர் அம்மானை’ எனும் இலக்கியத்தின் உருவாக்கத்திற்கும் தெல்லிப்பளையில் சமயப்பணியாற்றிய இயேசு சபைக் குருவான சுவாங்கறுவாலு எனும் பாதிரியாரே காரணமாகக் குறிப்பிடப்படு வதன் மூலம் இயேசு சபைக் குருக்களுடைய பணி இவ் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது என்பதையும் கூறமுடிகின்றது (ரூபன் , 2021: 51).

மேலும் “ஒல்லாந்தற்ற கலாபனையில கோயில் இடிச்சாப்பிறகு யாகப்பரையும் அங்க இருந்த தங்கத்தால செய்த முடி, சண்டை பிடிக்கிற வாள் எல்லாத்தையும் பெட்டிக்குள்ள வைச்சு மண்ணுக்குள்ள தாட்டுப்போட்டு மேல சின்ன குடிசை போட்டு அதில விளக்கு கொழுத்துறவையள் எண்டு எங்கட அப்பா சொல்லக் கேட்டிருக்கிறன்.” எனக் குறிப்பிடும் கிளாலிக் கிராமத்து ஸ்ரனிஸ்லோஸ் அவர்களிடம் பெறப்பட்ட நேர்காணல் தரவானது போர்த் துக்கேயரைத் தொடர்ந்து இலங்கையின் கரையோரத்தினைக் கைப்பற்றிய ஒல்லாந் தர்களால் இவ் ஆலயம் அழிக்கப்பட்ட தாகவும் ஆயினும் ஆலயத்தில் காணப்பட்ட மரத்தாலான யாகப்பரின் சொரூபம், பொற்கிரீடம், வாள் என்பன மரப்பெட்டி ஒன்றிற்குள் வைத்து நிலத்தில் புதைக்கப் பட்டு, அதன் மீது சிறிய குடிசையை அமைத்து அவ்விடம் ஆன்மீக முக்கியத்து வத்துடன் பராமரிக்கப்பட்டு வந்துள்ள தையும் எடுத்துரைக்கின்றது.

கி.பி.1679ஆம் ஆண்டு ஒல்லாந்தர் காலத்தில் தெல்லிப்பளையில் வசித்து வந்த புனித யாகப்பரினுடைய தீவிர விசுவாசியான பூதனாராய்ச்சி என்பவரிடம் தென்னமரவடியில் வன்னிச்சியராகக் காணப்பட்ட மரிய செம்பாத்தை என்பவரைக் கைது செய்து யாழ்ப்பாணக் கோட்டைக்கு அழைத்து வரும் பொறுப்பு ஒல்லாந்தர்களால் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது (கல்யாணி, 2021: 13). இவ்வாறு பூதனாராய்ச்சி மரிய செம்பாத்தையைக் கைதுசெய்யப் புறப்பட்டுச் செல்லும் பயணத்தின் இடைநடுவில் இரவு நேரத்தில் இக் கிளாலிப் பகுதியில் தங்கிச்செல்லும் சூழல் ஏற்பட்டபோது, தங்கும் இடத்தில் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படப்போகின்றது என்பதனை பூதனாராய்ச்சியினுடைய கனவில் புனித

யாகப்பர் வெளிப்படுத்தியதால், தக்க பாதுகாப்புடன் இரவு படுக்கும் இடத்தினை மாற்றி உறங்கியதன் பயனாக ஆபத்தி லிருந்து காப்பாற்றப்பட்டார் (கல்யாணி, 2021: 13). இவ்வாறு பாதுகாப்பாகத் தான் படுத்து உறங்கிய இடத்தில் யாகப்பர் ஆலயம் ஒன்று அமைந்திருந்தது எனவும் ஒல்லாந்தர்களால் அது அழிக்கப்பட்டது என்பதையும் அறிந்துகொண்ட பூதனாராய்ச்சி, தான் செல்லும் விடயம் வெற்றியாக அமைந்தால் அவ்விடத்தில் மீண்டும் ஒரு ஆலயம் அமைப்பதாகக் கூறி, வெற்றியுடன் திரும்பியதால் மீண்டும் ஏற்கனவே யாகப்பர் ஆலயம் இருந்த இடத்தில் சிறிய ஆலயம் ஒன்றை அமைத்ததாக யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்னும் நூல் எடுத்துரைக்கின்றது (வேலுப்பிள்ளை, 2004: 183-186). ஆயினும் பூதனாராய்ச்சியினால் அமைக்கப்பட்ட ஆலயம் மீண்டும் ஒல்லாந்தர்களால் அழிக்கப்பட்டுள்ளது (றோச், 2021: 31).

கி.பி. 1740இல் கத்தோலிக்கர்கள் சோறிஸ் என்ற கிறிஸ்தவரின் முயற்சியினால் இவ் ஆலயத்தை ஒரு சிறுகுடிசைக் கோயிலாகக் கட்டியெழுப்பியுள்ளனர் (கல்யாணி, 2021: 14). குறித்த ஆலயம் காணப்பட்ட இடத்திற்கு முன்பக்கத்திலுள்ள வயலில் வேலையில் ஈடுபட்டிருந்த சோறிஸ் என்பவர் நிலத்தை உழுதுகொண்டிந்த போது சிறிய கூட்டினுள் புனித யாகப்பருடைய மரச் சொரூபத்தினைக் கண்டெடுத்ததாகவும் தொடர்ந்து அவ்விடத்தில் பனை யோலையால் சிற்றாலயம் ஒன்றினை நிறுவி கண்டெடுத்த சொரூபத்தினை வைத்து வழிபட்டதாகவும் குறிப்புகள் காணப்படுகின்றன (றோச் பி., 2021: 31). இதனைத் தொடர்ந்து கி.பி.1782ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ்ப்பாணத் திலிருந்த (இவ் ஆலயத்தினுடைய உரிமையாளர்களாகக் கருதப்படுகின்ற பூதனாராய்ச்சியாரினுடைய வழிவந்த சந்திர சேகரா, செரூபின், ஹோமர் வன்னிய சிங்கம், இராஜகாரியார் போன்றோரின் முன்னோர்களில் ஒரு குடும்பம்) ஒரு குடும்பத்தினர் கிளாலிக் கடல் வழியாகப் பயணித்துக் கொண்டிருக்கும் போது, அவர்களுக்கு ஏற்பட்ட உயிர் ஆபத்திலி ருந்து யாகப்பருடைய பரிந்துரையால் காப்பாற்றப்பட்டதால் இதற்கு நன்றிகூறும் வகையில் அக்குடும்பத்தினர் அன்றிலிருந்து நீண்ட காலமாக யாகப்பர் ஆலயத்தைப் பராமரித்து வந்ததாகவும் கூறப்படுகின்றது (றோச், 2021: 33). அக் குடும்பத்தினருடைய வாரிசுகளாக நீக்கிலஸ் சந்திரசேகரா, செரூபின், ஹோமர் வன்னியசிங்கம், இராஜகாரியர் போன்றோர் குறிப்பிடப் படுகின்றனர். இவர்களுள் நீக்கிலஸ் சந்திரசேகரா என்பவர் பிற்காலத்தில் இவ் ஆலயத்திற்குத் தேர் ஒன்றினை அன் பளிப்புச் செய்ததாகக் கூறப்படுகின்றமை கவனிக்கத்தக்கதாகும் (றோச், 2021: 31).

தொடர்ந்து வந்த காலத்தில் திருகோண மலையைச் சேர்ந்த ‘ஆன்’ எனப்பட்ட பறங்கிப் பெண்மணியின் பண உதவியினால் இவ் ஆலயம் தற்போதுள்ள கட்டடமாக எழும்பியுள்ளது (கல்யாணி, 2021, 14). குறித்த ஆலயத்தினுடைய தரைப்பகுதியில் ‘1930’ என ஆண்டு குறிப் பொன்று பொறிக்கப்பட்டுள்ளமையானது, இக்காலப்பகுதியில் ஆலயமானது மீள் அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. காலத்துக்குக் காலம் அழிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து மீளவும் அமைக்கப்பட்டு வந்த இவ் ஆலயமானது ஆங்கிலேயர் காலப் பகுதியில் மீள்புணரமைப்பிற்கு உட்படுத் தப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. தொடர்ந்து கி.பி. 19ஆம் நூற்றாண்டில் எழுந்த ஏனைய கத்தோலிக்க ஆலயங்கள் போன்று இதுவும் முருகைக்கல்லும்,

செங்கல்லும், சுண்ணாம்பும், முதிரை மர உயர் தூண்களும் கொண்ட அழகிய சிறிய கட்டடமாகக் கட்டப்பட்டு இன்றைய தோற்றத்தைக் கொடுக்கின்றது (கல்யாணி, 2021, 14).

**கிளாலி புனித யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்திய சமூக உருவாக்கம் (1505-2024 வரை)**

வட இலங்கையில் காணப்படுகின்ற மிகப் பழமையான கிராமங்களுள் ஒன்றான கிளாலியில் போர்த்துக்கேயர்களால் புனித யாகப்பர் ஆலயம் அமைக்கப்பட்டதனைத் தொடர்ந்து கிறிஸ்தவத்திற்கு முக்கிய அடையாளமாக இக் கிராமம் திகழ்ந் துள்ளது. அங்கு இடம்பெற்ற ஆன்மீக வழிபாடுகள், வழிபாட்டுச் சடங்குகள், அங்கு உருவாக்கம் பெற்ற கிறிஸ்தவக் கலைகள் என்பவற்றினூடான கிறிஸ்தவ சமூக உருவாக்கப் பாரம்பரியம் பிரதான இடம்பெற்றுள்ளது.

**ஆன்மீக வழிபாடுகளின் ஊடாக சமூக உருவாக்கம்**

யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்தித் தோற்றுவிக்கப்பட்ட சமூக உருவாக்க முயற்சிகளுள் ஆன்மீக வழிபாடுகளின் ஊடான உருவாக்கம் முக்கியமானதாகும். ஆலயங்கள் சமூக உருவாக்கங்களில் பிரதான இடத்தினைப் பெற்றுக் கொள் வதனை பின்வருமாறு நோக்க முடியும்.

**நவநாள்களும் திருவிழா கொண்டாட்டமும்**

யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்திய நவநாள் கொண்டாட்டங்கள் ஏனைய ஆலயங்களை விடத் தனித்துவமானதாக அமையப் பெற்றுள்ளன. அதாவது ஆரம்ப காலங்களில் இவ் ஆலயத்தின் நவநாள் கொண்டாட்டங்கள் தனிப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினர்களுக்கும் எனப் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நவ நாள்களின் இறுதியிலும் புனித யாகப்பரினுடைய திருச்சொரூபம் கூட்டுடன் ஆலயத்தின் முன்றலில் பவனியாக எடுத்துச் செல்லப்படும். ஒவ்வொரு நவநாள் வழிபாடுகளின் ஆரம்பம் மற்றும் இறுதியில் விருத்தம் பாடும் மரபும் காணப்படுவதாக கிளாலி யாகப்பர் பங்கின் மூத்த அங்கத்தவர் ஸ்ரனிஸ்லோஸ் என்பவரிடம் பெறப்பட்ட நேர்காணல் ஆதாரத்தின் அடிப்படையில் குறிப்பிடலாம். இவ்வாறாக இவ் ஆலயத்தினை மையப்படுத்தியதாக ஆரம்பிக்கப்பட்ட நவநாள் கொண்டாட் டங்களே பிற்காலத்தில் இங்குள்ள ஏனைய ஆலயங்களிலும் பரவலடைந்துள்ளது. அவ்வகையில் புனித தோமையார் ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம், புனித கண்மணி மாதா ஆலயம், புனித மிக்கேல் ஆலயம் போன்ற ஆலயங்களிலும் இவ்வாறான நவநாள்களும் திருநாள்களும் வெகுவிமரிசையாகக் கொண்டாடப் படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான நவநாள்கள் இப் பகுதியின் சமூக உருவாக்கத்தில் அதிகமாகப் பங்களிப்புச் செய்துள்ளமையினைக் காணலாம். அதாவது ஆரம்ப காலங்களில் ஒவ்வொரு குடும்பங்கள் மூலமாக நவநாள்கள் கொண்டாடப்பட்ட போதும், அக் குடும்பங்களின் தலைமையில் இங்குள்ள மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதாக ஸ்ரனிஸ்லோஸ் என்பவருடனான நேர்காணல் எடுத்துரைக்கின்றது. மேலும் நவநாள்களில் பாடப்படுகின்ற விருத்தங்கள் இப் பகுதியில் பாரம்பரிய சுதேச மரபினைக் கடைப்பிடிக்கின்ற சமூக உருவாக்கத்திற்கு வழியமைத்துக் கொடுத்துள்ளமையி னையும் காணமுடிகின்றது. மேலும் நவநாள்கள் இங்கு விசுவாசம் நிறைந்த சமூக உருவாக்கத்திற்கும் காரணமாக அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும். நவநாள்களில் பல்வேறு இடங்களில் வாழும்

மக்களும் தமது சொந்தக் கிராமத்திற்கு வருகைதரும் மரபானது சொந்த மண்ணை நேசிக்கின்ற மண்வாசனை நிறைந்த சமூக உருவாக்கத்திற்கும் வித்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**பக்தி முயற்சிகள்**

ஆலயத் திருவிழாக்களைத் தொடர்ந்து விசேட கடன் திருநாள்களும் இப் பகுதியில் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன எனலாம். குறிப்பாகக் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு உள்ளிட்ட பாஸ்கா நிகழ்வுகளும் இங்கு இடம் பெறுவதுண்டு. தவக்காலங்களில் பசாம் எனப்படுகின்ற வியாகுலப் பிரசங்கம் பாடப்படுகின்ற வழக்கம் இன்றும் காணப்படுகின்றது. பெரிய வியாழன் அன்று இரவு வேளையில் மக்கள் அனைவரும் ஆலயங்களிலேயே தங்கி திருவிழிப்பில் ஈடுபடுகின்ற வழக்கத்தினையும் இன்றளவும் காணமுடிகின்றது. மறுநாள் பெரிய வெள்ளி அன்று இடம்பெறும் வழிபாட்டுச் சடங்குகளுக்குப் பின்னர் 'உரிமைக் கஞ்சி' எனும் உணவு வழங்கப்படும் வழக்கத்தினையும் காணலாம். அதாவது உரிமைக் கஞ்சி என்பது இறப்பு நிகழ்ந்த வீடுகளில், மரணமடைந்தவரினுடைய நெருங்கிய உறவினர்களுக்கு வழங்கப் படும் உணவினைக் குறிப்பதாகக் காணப் படுகின்றது. எனவே இயேசுக் கிறிஸ்துவி னுடைய மரணத்தின் பின்னர் இங்குள்ள கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் இவ் உணவு வழங்கப்படுகின்றமை குறிப் பிடத்தக்கதாகும். மேலும் அனைத்து ஆன்மாக்களின் தினமான கார்த்திகை இரண்டாம் திகதியில் சேமக்காலையில் மாலை நேரத்தில் திருப்பலி இடம் பெறு வதனையும் காணலாம். திருப்பலியின் நிறைவில் ஒருசில குடும்பத்தினரால் 'அப்பம்' அனைவருக்கும் பரிமாறப்படும் வழக்கமும் இங்கு உள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறான பக்தி முயற்சிகள் இவ் ஆலயத் தினை மையப்படுத்திய விசுவாசமுள்ள சமூக உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந் துள்ளமையினைக் காணமுடிகின்றது. அதாவது வருடத்தின் பெருமளவான காலங்களைப் பக்தி முயற்சிகளில் செலவிடுகின்றமையின் காரணமாக இங்குள்ள மக்கள் மத்தியில் இயல்பாகவே கிறிஸ்தவ விசுவாசம் பலப்படுத்தப்பட்டுள் ளமையினைக் காணலாம். மேலும் ஒவ்வொரு ஆலயத் திருவிழாக்களிலும் அனைத்து மக்களும் இணைந்து பங்களிப்புச் செய்வதன் மூலமாக ஒற்றுமை நிறைந்த சமூக உருவாக்கம் நடைபெற்றுள் ளமையினை அறிய முடிகின்றது. திருவிழாக் காலங்களிலும் ஏனைய விசேடமான கடன் திருநாள்களிலும் விருந்து பரிமாறப்படுவதன் மூலமாகப் பகிர்தலைக் கொண்ட சமூக உருவாக்கம் நடைபெற்றுள்ளது. ஒவ்வொரு ஆலயத் திருவிழாக்களும் விருந்துடனேயே நிறைவடைகின்றமையானது ஆலயங்களை மையப்படுத்திய பகிர்தலை வளர்க்கும் சமூகமாக இச் சமூகம் உருவாக்கப்பட்டுள் ளமையினை உணர முடிகின்றது.

**வழிபாட்டுச் சடங்குகளின் ஊடாக சமூக உருவாக்கம்**

ஆலயங்கள் எனும்போது சடங்குகளின் உருவாக்கம் மிகவும் முக்கியமாகக் காணப்படுவதனை அவதானிக்கலாம். அதாவது ஆலயங்களை மையப்படுத்திய சமூக உருவாக்க முயற்சிகளில் சடங்குகளே பிரதான இடத்தினைப் பெறுவதாகக் காணப்படும். அந்தவகையில் புனித யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்தித் தோற்றுவிக்கப்பட்ட கிறிஸ்தவ சமூக உருவாக்கத்தில் முக்கியம் பெறும் கிறிஸ்தவச் சடங்குகளைப் பின்வருமாறு நோக்கலாம்.

### தேர்ப்பவனி

கிளாலிப் பகுதியில் புனித யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்தி உருவாக்கப் பட்ட கிறிஸ்தவ சடங்குகளில் தேர்ப் பவனி மிக முக்கியமானதாகும். வட இலங்கையில் காணப்படும் கத்தோலிக்க ஆலயங்களி லேயே முதன் முதலாகத் தேர்ப் பவனி இடம்பெற்ற ஆலயமாகக் குறித்த யாகப்பர் ஆலயம் காணப்படுகின்றது (றோச், 2021: 31). தேர்ப்பவனி என்பது இந்து சமயங்களில் பயன்படுத்தப்படுகின்ற ஒரு பாரம்பரியச் சமயச் சடங்காகும். அவ்வாறானதொரு சடங்கினை இப்பகுதியில் கத்தோலிக்க ஆலயத்தினை மையப்படுத்தி மேற் கொண்டிருப்பது சிறப்பம்சமாகும். இத் தேர்ப் பவனியானது கத்தோலிக்கத்தில் சுதேச மயமாக்கலினுடைய அடையாளங்களுள் ஒன்றாக நோக்கக் கூடியதாக உள்ளது. இவ் ஆலயத் திற்கு இத் தேர் நீக்கலஸ் சந்திரசேகரா என்பவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது (றோச் பி., 2021: 31).

இவ்வாலயத்தினை மையப்படுத்திய தேர்ப் பவனி ஆரம்பக் காலங்களில் ஆலயத் திருவிழாவினுடைய ஒன்பதாம் நாள் இரவில் இடம்பெறும். இதனால் பத்தாம் நாள் ஆலயத் திருவிழா அன்று தேர் இழுக்கப் படுவதில்லை. அவ்வகையில் நற்கருணை வழிபாடு முடிவடைந்ததன் பின்னர் இரவு வேளையில் ஆலயத்தின் முன்றலில் வைத்து தேர் ஆலயத்தினைச் சுற்றிவர இழுக்கப்படும் எனவும் ஸ்ரனிஸ்லோஸ் அவரின் தரவுகள் எடுத்துரைக்கின்றன. எனினும் பிற்பட்ட காலங்களில் ஒன்பதாம் நாள் தேர்ப் பவனி இடைநிறுத்தப்பட்டு ஆலயத் திருவிழா அன்று காலையில் நடைபெற்றதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஆலயத்தின் திருவிழாத் திருப்பலி நிறைவுற்றதும் ஆலயத்தின் முன்றலில் தேர் இழுக்கப்படும் என்பது குறிப்பிடத் தக்கதாகும். தேர் பவனியின் போது தேரினுடைய மையப் பகுதியில் அன்னை மரியாளினுடைய பெரிய திருச்சொரூபமே வைக்கப்படும். கிளாலியைச் சார்ந்த ஸ்ரனிஸ்லோஸ் "அந்தக் காலத்துல தேர் இழுக்கேக்க மாதான்ர சொரூபத்த தான் மேல வைப்பினம். அதுக்கு கீழ தான் யாகப்பர வைச்சு தேர் இழுக்கிறது." எனக் குறிப்பிட்ட தகவலானது, மரியாளினுடைய திருச்சொரூபத்திற்குக் கீழ்ப் பகுதியிலேயே சிறிய திருச்சொரூபமான புனித யாகப் பருடைய திருச்சொரூபம் வைக்கப்படும் என்பதை ஆதாரப்படுத்துகிறது. மேலும் இம்மரபானது கிளாலி கத்தோலிக்கர் அன்னை மரியாள் மீது கொண்டுள்ள பக்தியினையும் வெளிப்படுத்துகின்றது.

தேர்ப் பவனி என்பது இவ் ஆலயத்தினை மையப்படுத்தி மக்கள் மத்தியில் ஒன்றிப்பினை ஏற்படுத்துவதில் மிக முக்கிய பங்கினை வகித்துள்ளமையினை அறிய முடிகின்றது. இவ்வாறு தேர்ப் பவனி இடம்பெறுகின்ற போது இப் பகுதியில் வாழும் மக்கள், வேறு பகுதிகளிலிருந்து வருகைதந்துள்ள மக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து வடம் பிடித்துத் தேர் இழுக்கும் காட்சியானது மக்கள் மத்தி யிலான ஒற்றுமையினையும் நட்புற வினையும் வெளிப்படுத்துவதாக அமையும். ஆலயத்தின் முன்றல் பகுதியானது வயல் வெளியாகக் காணப்படுகின்றது. எனவே தேர் நகருவது மிகவும் கடினமானதாக அமையும். எனினும் மக்களுடைய ஒற்றுமையும் விசுவாசமும் தேரினுடைய நான்கு சக்கரங்களையும் மெல்ல மெல்ல நகர்த்தும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### ஏமு கூட்டுப் பவனி

புனித யாகப்பர் ஆலயத்திற்கேயுரிய தனித்துவமான சிறப்பம்சங்களுள் ஒன்றாக ஏழு கூட்டுப் பவனி அமைந்துள்ளது. இங்குக் காணப்படுகின்ற கத்தோலிக்க

ஆலயங்களான யாகப்பர் ஆலயம், மிக்கேல் ஆலயம், தோமையார் ஆலயம், கண்மணி மாதா ஆலயம், அந்தோனியார் ஆலயம் போன்றவற்றில் காணப்படுகின்ற ஏழு புனிதர்களுடைய திருச்சொரூபங்களும் ஒன்றாக இணைந்து பவனியாக எடுத்துச் செல்லப்படும். மேற்கூறப்பட்ட ஆலயங் களுள் புனித அந்தோனியார் ஆலயத்திலே சவேரியார், செபஸ்தியார் ஆகியோருடைய திருச்சொரூபங்களும் காணப்படும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (பாக்கியநாதன், 2021: 41) இந்நிகழ்வே ஏழு கூட்டுப் பவனி என அழைக்கப்படும். இச் சடங்கினுடைய தோற்ற காலத்தினைக் குறித்து உறுதியான தகவல்கள் எவையும் கிடைக்கப்பெற வில்லை. எனினும் மேற்படி சடங்கின் தோற்றத்துடன் தொடர்புடைய செவிவழிக் கதை ஒன்றினை இங்குள்ள மக்கள் மத்தியில் மேற்கொண்ட நேர்காணல் மூலம் அறியமுடிந்தது. அதாவது ஆரம்ப காலங்களில் இக் கிராமத்தில் பெரும் கொள்ளை நோய் ஒன்று ஏற்பட்டு, மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டதுடன், அதிகளவானோர் மரணமடைந்துள்ளனர். இந்நிலையில் இங்கு வாழ்ந்த கத்தோலிக்க மக்கள் தம்முடைய ஆலயங்களில் காணப்படும் புனிதர்களுடைய திருச் சொரூபங்களை வெளியில் எடுத்து கிராமத்தினைச் சுற்றிவரப் பவனியாக எடுத்துச் சென்றுள்ளனர். இப் பவனி கடற்கரையில் புனித யாகப்பர் ஆலயத்தில் நிறைவு பெற்றுள்ளது. இந் நிகழ்வைத் தொடர்ந்து இங்கு கொள்ளை நோய் மறைந்துள்ளது. இதனால் மேற்படிப் பவனியினை வருடந்தோறும் இங்கு தொடர்ந்து மேற்கொண்டு வந்தமையானது எடுத்துரைக்கப்பட வேண்டியது.

பவனியின் முடிவின் ‘கிளாலிக் காட்டு அம்மா’ என அழைக்கப்படும் பெண் மணியின் வீட்டில் அனைத்து மக்களுக்கும் விருந்து சமைத்து வழங்கப்படும் எனப் பின்வருமாறு கிளாலியைச் சார்ந்த 84 வயதுடைய ஸ்ரனிஸ்லோஸ் குறிப்பிட்டுள்ளார். “பெருநாள் தொடங்கி எட்டாம் நாள் பின்னேரம் ஏழு கூடுகளும் தூக்கிக் கொண்டு போறத பாக்க நல்லா இருக்கும். அண்டைக்கு கிளாலியில பெரிய கொண்டாட்டமா தான் இருக்கும். கொழும்பில இருக்கிற கிளாலிக்காட்டு அம்மான்ர குடும்பம் அன்டைக்கு ஊருக்கு வந்திடுவினம். தீப்பந்தம் பிடிக்கிற ஆக்களையும், போட்டிக்கு நட்டுவமேளம் அடிக்கிற ஒவ்வொரு கோயில்காறரையும் பாக்கேக்க எங்களுக்கு புளுகமா இருக்கும். பவனி முடிய அன்டைக்கு இரவிரவா கிளாலிக்காட்டு அம்மான்ர வீட்ட ஆடு, மாடு, கோழி என்டு பெரிய கொண்டாட்டமா இருக்கும்.” விருந்திலே ஆடு, மாடு, கோழி போன்ற மாமிச உணவுகளே அதிகமாகப் பரிமாறப்படுவதாகக் கூறப்படுகின்றது. குறித்த சடங்கானது இக் கிராமத்திற் கேயுரிய தனித்துவமான சடங்காகும். இச் சடங்கின் மூலமாக இப் பகுதியில் கூட்டுப் பொறுப்புணர்வும் ஒற்றுமையும் உள்ள சமூக உருவாக்கங்கள் நடைபெற்றுள்ளமை யினை அவதானிக்க முடிகின்றது. அதாவது ஏழு கூடுகளையும் ஒன்றிணைத்து பவனி நடைபெறுதல் என்பது இங்குள்ள அனைத்து மக்களையும் ஒரு கோட்டில் இணைப்பதனையே குறித்து நிற்கின்றது. இதனால் தமக்கிடையே பல்வேறு ஆலயங்களாகப் பிரிந்திருந்தாலும் இச் சடங்கின் மூலமாக அனைவரும் ஒன்றாக இணைக்கப்படுகின்றனர். மேலும் ஒருவர் ஒருவருடைய பவனிகளில் இணைந்து பங்குபற்றும் போது மக்களிடையே கூட்டுப் பொறுப்புணர்வு வளர்ச்சி பெறுவதாகக் காணப்பட்டுள்ளது. இதனைத் தவிர இச் சடங்கிலே பயன்படுத்தப்படுகின்ற மேள இசை வாத்தியங்கள் கலை இரனை

மிக்கதான சமூக உருவாக்கத்திற்கு வழி யமைத்துக் கொடுத்துள்ளமையும் கவனிக்கத்தக்கதாகும். சடங்கின் இறுதியில் பரிமாறப்படுகின்ற விருந்து பகிர்தலைக் கொண்டதான சமூக உருவாக்கத்திற்குப் பங்களிப்பதாக அமைந்துள்ளது. இவ்வாறாக ஏழு கூட்டுப்பவனி இப் பகுதியில் ஆலயத்தினை மையப்படுத்திய கிறிஸ்தவ சமூக உருவாக்கத்திற்கு வழியமைத்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**கிறிஸ்தவக் கலைகளினூடான சமூக உருவாக்கம்**

சமூக உருவாக்க முயற்சிகளில் கலைகள் மிகவும் பிரதான இடத்தினைப் பெறுவை யாகக் காணப்படுகின்றன. அவ் வகையில் கிளாலியில் புனித யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்தித் தோற்றுவிக்கப்பட்ட கிறிஸ்தவ சமூக உருவாக்கத்திலும் கிறிஸ்தவக் கலைகள் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

**நாட்டுக்கூத்துக்கள்**

ஆரம்ப காலப்பகுதிகளில் இவ் ஆலயத் திருவிழாக் காலங்களில் சந்தியாகுமயோர் அம்மானைக் கூத்தாக அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. எனினும் அதற்கான சான்றுகளும் செவிவழிக் கதைகளாக மட்டுமே காணப் படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். பிற்பட்ட காலங்களில் ஆலயத் திருவிழா அன்று இரவு நேரங்களில் ஆலய முன்றலில் கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. எனினும் அவ்வாறு அரங்கேற்றம் செய்யப்பட்ட கூத்துக்களி னுடைய விபரங்களை அறிய முடியவில்லை. எனினும் இங்குள்ள ஏனைய கத்தோலிக்க ஆலயங்களில் அவை தொடர்ந்த வண்ணம் காணப்பட்டுள்ளமையினை அறியலாம். அவ்வகையில் இங்குள்ள புனித அந்தோனியார் ஆலயம், புனித மிக்கேல் ஆலயம் என்பவற்றில் ஆலயத் திருவிழா நாளன்று இரவில் கூத்துக்கள் அரங்கேற்றப் பட்டுள்ளன. அந்தோனியார் ஆலயத்தில் அந்தோனியாருடைய வாழ்க்கை வரலாறும் மிக்கேல் ஆலயத்தில் மிக்கேலுடன் தொடர்புடைய வரலாறும் கூத்துக்களாக ஆடப்பட்டுள்ளன.

**அம்மானை**

அம்மானை என்பது ஈழத்தில் காணப்படு கின்ற ஒரு நாட்டார் இலக்கிய வடிவம் ஆகும். இருபது முதல் இருபத்தைந்து வயதுள்ள பெண்கள் மூன்று பேராக இணைந்து விளையாடும் ஒரு கல் விளையாட்டாக அம்மானை காணப்படுகின்றது (ரூபன், 2021:49-50). இவ் அம்மானை விளையாட்டினை விளையாடும் போது பாடுவதற்காக உருவாக்கப்பட்ட பாடல்களையே அம்மானைப் பாடல்கள் என அழைப்பர். இரண்டு வரிகளைக் கொண்டதாக இப் பாடல்கள் அமைந்திருக்கும். இந்த இலக்கிய வடிவத்தினைக் கையாண்டு கி.பி. 1647ஆம் ஆண்டு தெல்லிப்பளையினைச் சேர்ந்த பேதுருப் புலவர் என்பவரால் இவ் ஆலயத்தினை மையமாகக் கொண்டு ‘சந்தியாகுமயோர் அம்மானை’ எனும் இலக்கியம் படைக்கப்பட்டுள்ளது (ரூபன், 2021: 52). தெல்லிப்பளையில் பணியாற்றிய யுவாம் கறுவாலு (Joam de Carvalho) எனும் இயேசு சபைக் குருவினுடைய தூண்டு தலினால் இவ் இலக்கியம் படைக்கப்பட்டுள் ளது. (மேரி வினிபிரிடா, 2022:38) இவ் இலக்கியத்திலே இஸ்லாமியருக்கும் ஸ்பானியருக்குமிடையில் நடைபெற்ற போரிலே யாகப்பர் வெண்குதிரை மீது ஏறி போர் புரிந்து இஸ்லாமியரைத் தோற்கடித்த வரலாறு கூறப்பட்டுள்ளது. மேலும் கிளாலியில் அமைந்துள்ள யாகப்பர் ஆலயத்தினுடைய சிறப்பும் பாடப்பட் டுள்ளது. போர்த்துக்கேயர் காலத்தில்

உருவாக்கப்பட்ட குறித்த அம்மானை இலக்கியமானது யாகப்பர் ஆலயத் திரு விழாக் காலங்களில் பாடப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது.

**விருத்தம் பாடுதல்**

யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட கலை மரபுகளில் விருத்தப் பாடல்கள் பாடும் மரபும் முக்கிய மானதாகும். அதாவது ஆலயத்தின் திரு விழாக் காலப் பகுதிகளில் புனித யாகப் பரினுடைய புகழினையும் சிறப்புக்களையும் விருத்தப்பாவினால் பாடும் முறையினையே விருத்தம் பாடுதல் என அழைக்கின்றனர். இவ்விருத்தம் பாடுதலின் தோற்ற காலத்தினை உறுதியாகக் குறிப்பிட முடிய வில்லை. இதனை இங்குள்ள முதியவர்கள் மத்தியில் மேற்கொண்ட நேர்காணல்கள் மூலம் அறியமுடிந்தது. குறிப்பாக கிளாலியைச் சார்ந்த மூத்த கல்விமானும் அரச உத்தியோகத்தருமான ஸ்ரனிஸ்லோஸ் அவர்கள் இதனை "கோயில்ல போர்த்துக் கீசற்ற காலத்தில பாடின சந்தியோகுமையோர் அம்மானையில இருக்கிற பாட்டுக்கள தான் பிறகு விருத்தம் என்டு பாடத் தொடங்கி யிருப்பினம் என்டு நான் நினைக்கிறன்" என குறிப்பிட்டுள்ளமையானது சந்தியாகும யோர் அம்மானையினுடைய ஒரு வழித் தோன்றலாகவே இவ்விருத்தம் பாடும் மரபு அமையப் பெற்றிருக்கலாம் என ஓரளவுக்கு ஊகிக்கலாம். ஆலயத்தினுடைய திரு விழாக் காலங்களில் பத்து நாட்களும் இவ் விருத்தப் பாடல்கள் திருப்பலிக்கு முன்னரும், பின்னரும் பாடப்படுவதாகக் கூறப்படுகின்றது. இம் முறையானது பிற்பட்ட காலப் பகுதிகளில் இங்குள்ள ஏனைய ஆலயங்களிலும் பரவலடைந்து வளர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது இங்கு அமைந்துள்ள ஏனைய ஆலயங்களிலும் திருவிழாக் காலங்களில் இவ்விருத்தம் பாடப்படும் மரபு காணப் பட்டுள்ளது. யாகப்பர் ஆலயத்தில் புனிதரைப் புகழும் பாடல்கள் ஏனைய ஆலயங்களில் அங்குள்ள புனிதர்களுக்கு ஏற்ற வகையில் மாற்றப்பட்டுப் பாடப் பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட அம்மானை, விருத்தம் பாடுதல், நாட்டுக் கூத்துக்கள் என்பன இவ் ஆலயத்தினை மையப்படுத்திய கிறிஸ்தவக் கலைப் பாரம்பரியம் மிக்கதான சமூக உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந் துள்ளன. குறிப்பாகக் கிறிஸ்தவத்தினை சுதேசமயப்படுத்திய சமூகமாக இச் சமூகம் உருவாக்கம் பெறுவதற்கு மேற்கூறப்பட்ட கலைகள் பிரதான பங்களிப்பினை வழங்கியுள்ளன. இக் கலைகள் ஆண்களின் ஈடுபாட்டினை ஆலயங்களை நோக்கி ஈர்ப்பதில் மிக முக்கிய பங்கினை வகித்துள்ளமையும் கவனிக்கத்தக்கதாகும்.

**யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்திய சமூக உருவாக்கத்திற்கு வளமூட்டிய விடயங்கள்**

யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட கிறிஸ்தவ சமூகப் பாரம்பரியங்களுக்கு வளமூட்டிய விடயங்களுள் 'புனித யாகப்பரினுடைய பரிந்து பேசுதல் மீது மக்களுக்குக் காணப்படுகின்ற நம்பிக்கையும்' ஒன்றாகும். இவ் ஆலயத்தினுடைய தோற்றம் குறித்துக் குறிப்பிடப்படுகின்ற வரலாற்றுக் கதை களிலும் யாகப்பரினுடைய பரிந்து பேசுதலின் வல்லமை முக்கியத்துவப் படுத்தப்படுவதனைக் காணலாம். குறிப்பாக கி.பி.1990ஆம் ஆண்டிற்கும் கி.பி.1996ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப் பகுதிகளில் இக் கடற்பகுதி ஊடாக மேற்கொள்ளப்பட்ட உயிர் ஆபத்து மிகுந்த கடற்பயணங்களில் புனிதருடைய பரிந்து பேசுதலையே மக்கள் பெரிதும் நம்பித் தமது பயணத்தினைத் தொடர்வதாகக்

கூறப்படுகின்றது. மேலும் வேறு பல தேவைகளின் பொருட்டு புனித யாகப்பரிடம் முன்வைக்கப்படுகின்ற வேண்டுதல்கள் அவருடைய பரிந்து பேசுதலால் கிடைக்கப் பெறுவதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வாறாக தம்முடைய வேண்டுதல்கள் அனைத்தும் புனித யாகப்பருடைய பரிந்து பேசுதலால் பெருமளவில் நிறைவேறுகின்றன எனும் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற நம்பிக்கை பெருமளவானோரை இவ் ஆலயம் நோக்கி வரவழைக்கின்றது.

சமூக உருவாக்கத்திற்குப் பிரதான காரணிகளாகக் காணப்பட்ட அம்சங்களுள் இப் பகுதியில் காணப்பட்ட சமயத் தலைவர்கள் மற்றும் மக்களுடைய ‘சமூகத் தலைவர்களுடைய ஆளுமைகளும்’ பிரதானமானவையாகும். இப் பகுதியில் காணப்படுகின்ற ஐந்து கத்தோலிக்க ஆலயங்களைச் சேர்ந்த மக்களும் தங்களுக்குள் பொதுவானதொரு ஆன்மீகத் தலைவரைத் தெரிவு செய்து வாழும் வழக்கத்தினைக் கொண்டிருந்துள்ளனர். அவ்வாறு பொறுப்பாகக் காணப்படுகின்ற சமூகத் தலைவர்கள் தம் மக்களிடையே ஒற்றுமையினை ஏற்படுத்துவதிலும் பிற ஆலய மக்களுடன் நட்புறவினைப் பேணுவதிலும் மிகுந்த கவனம் செலுத்தி வந்துள்ளனர்.

‘கிளாலியின் அமைவிடம்’ குறிப்பிடத்தக்க அங்கம் வகிக்கின்றது. கிளாலிப் பிரதேசமானது சிறப்பான கடற் துறைமுகம் ஒன்றினைக் கொண்டு அமைந்துள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்தினையும் வன்னிப் பெருநிலப் பரப்பினையும் இணைக்கின்ற பகுதியாகவும் அமைந்து காணப்படு கின்றது. இதன் காரணமாகப் பெருமளவில் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியாகவே முற்காலப் பகுதியில் இப் பகுதி அமையப்பெற்றுள்ளது. கடல் வழியாக இப் பகுதிக்கு வருகை தந்ததன் பின்னர் இங்கிருந்து தரைவழியாக யாழ்ப்பாணத் திற்குச் செல்ல முடியும்.

கிளாலிப் பகுதியில் உருவாக்கப்பட்ட கிறிஸ்தவ சமூக உருவாக்கத்திற்கு வளமூட்டிய அம்சங்களுள் இங்கு வாழும் ‘மக்கள் மத்தியில் நிலவிய ஒற்றுமையி னையும் பிரதானமானதாகக் குறிப்பிடலாம். “வெவ்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் இக் கிராமத்திற்கு வருகை தந்து குடியமர்ந்த போதும், அவர்கள் மத்தியில் எவ்வித முரண்பாடுகளும் பெரிதளவில் ஏற்பட்டி ருக்கவில்லை. சமூக மற்றும் பொருளாதார ரீதியாக இங்கு வாழ்ந்த மக்கள் மத்தியில் வேறுபாடுகள் காணப்பட்டிருந்த போதிலும் கிராமம் எனும் வகையில் ஒற்றுமையாகவே செயற்பட்டனர்.” என முன்னாள் கிளாலி கடற்தொழிலாளர் சங்கத் தலைவராகச் செயற்பட்ட வரதராசா என்பவர் நேர் காணலின் போது கூறிய விடயம் உறுதிப்படுத்துகின்றது.

யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்தித் தோற்றுவிக்கப்பட்ட கிறிஸ்தவ சமூக உருவாக்கத்தினில் ‘கலைகளின் உரு வாக்கமும்’ முக்கியமானதாகும். மேற் கூறப்பட்ட கலைப் பாரம்பரியங்கள் இப் பகுதியில் தொடர்ந்து பல காலம் பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளன. இதற்கு மிக முக்கியமான காரணிகளுள் ஒன்றாக இப் பகுதியில் வாழ்ந்த திறமையான கலைஞர்களைக் குறிப்பிடலாம். மீன்பிடியும் விவசாயத்தினையும் வாழ்வாதாரங்களாகக் கொண்டிருந்த இம்மக்கள் மத்தியில் மண்வாசனையும் பற்றும் அதிகமாகவே காணப்பட்டுள்ளது. இதனை அடிப்படை யாகக் கொண்டு நாட்டுப்புறக் கலைகளில் ஆர்வமும் திறமையும் அதிகமாகக் கொண்டவர்களாக இவர்கள் காணப் பட்டுள்ளனர்.

போர்த்துக்கேயர்களால் கொண்டுவரப்பட்ட கத்தோலிக்கமானது உரோமன் கத்தோலிக்கம் என்னும் பெயரிலேயே அழைக்கப்பட்டது. இது உரோமையினை மையமாகக் கொண்ட மேலைத்தேச மரபுகளுக்கு உட்பட்ட சமயமாகவே காணப்பட்டிருந்தது. எனினும் கிளாலிப் பகுதியில் கத்தோலிக்க சமயத்தினைப் பரப்பிய போர்த்துக்கேயர்கள் அதனை 'சுதேசமயப்படுத்துவதில்' சிறப்பாக ஈடுபட்டுள்ளமையினை அவதானிக்கலாம். அவ்வகையில் இக் கிளாலிப் பகுதியில் புனித யாகப்பர் ஆலயத்தினை அமைத்த போர்த்துக்கேயர்கள் பெருமளவில் சுதேச மரபுகளை உள்வாங்கி சமயத்தினை மக்கள் மத்தியில் கொண்டுசென்றுள்ளனர். எடுத்துக்காட்டாக இலங்கையில் பயன் பாட்டில் காணப்பட்ட சுதேச தமிழ் இலக்கிய வடிவமான அம்மானையினைப் பின்பற்றி 'சந்தியாகுமயோர் அம்மானை' எனும் இலக்கியத்தினைப் படைத்துள்ளமை யினைக் குறிப்பிடலாம்.

போர்த்துக்கேயர்களுடைய வருகைக்குப் பின்னரான காலப்பகுதிகளிலேயே இங்கு கத்தோலிக்கம் பரப்புதல் செய்யப்பட்டு ள்ளது. கி.பி.1620ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயர்களால் இப் பகுதியில் புனித யாகப்பர் ஆலயம் அமைக்கப்பட்ட மையானது மேற்கூறப்பட்ட 'கத்தோலிக்க விசுவாசத்திற்கு' மேலும் உரமூட்டியது எனலாம். இவ் ஆலயத்தினைத் தொடர்ந்து பிற்பட்ட காலப் பகுதிகளில் இங்கு வாழ்ந்த மக்களால் மேலும் பல கத்தோலிக்க ஆலயங்கள் அமைக்கப்பட்டு வழிபடப் பட்டமையானது இம் மக்களினுடைய விசுவாசத்தின் உறுதிப்பாட்டினையே எடுத்தியம்புகின்றது. இவ்வாறு இப் பகுதியில் வாழ்ந்த மக்கள் மத்தியில் காணப்பட்ட கத்தோலிக்க விசுவாசமானது இவ் ஆலயத்தினை மையப்படுத்திய கிறிஸ்தவ சமூக உருவாக்கத்திற்கு மிகவும் பலம் சேர்த்துள்ளதாக அமையப் பெற்றுள்ளது. அதாவது ஆலயங்களை மையப்படுத்தி நடைபெறும் வழிபாடுகள் அங்குள்ள மக்களின் நம்பிக்கையின் வெளிப்பாடுகளாகவே விளங்கின. அதனைப் போலவே இவ் ஆலயத்தில் நடைபெற்ற ஆரம்பக்கால வழிபாடுகள் இங்குள்ள மக்கள் மத்தியில் காணப்பட்ட நம்பிக்கையின் அடையாளமாகவே நோக்கப்படுகின்றன. இவர்களிடையே காணப்பட்ட நம்பிக்கையே கத்தோலிக்கப் பாரம்பரியம் மிக்க சமூக உருவாக்கத்திற்கு வழிவகுத்துள்ளது. மக்கள் ஒற்றுமை யாகவும், பக்தியுடனும் வழிபாடுகளை தம் முடைய கலைநயத்திற்கு ஏற்ப சிறப்பிக்க முற்படவே ஒன்றிப்பு, விசுவாசம், கூட்டுப் பொறுப்புணர்வு, கலை இரசனை மிக்க ஒரு சமூகம் உருவாக்கம்பெற வித்திட்டுள்ளது எனலாம்.

### யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்திய சமூக உருவாக்கத்தின் அண்மைக்கால நிலை

கிளாலி புனித யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்தித் தோற்றுவிக்கப்பட்ட கிறிஸ்தவ சமூக உருவாக்கம் என்பது பல நூற்றாண்டு காலப் பழமையினைக் கொண்டுள்ளது. தொடர்ச்சியாகப் பேணிப் பாதுகாக்கப்பட்ட இக் கிறிஸ்தவ சமூகப் பாரம்பரியமானது அண்மைக் காலங்களில் வலுவிழந்தும் அழிவடைந்தும் செல்லு கின்றமை மிகவும் கவலைக்குரியதாகும். குறிப்பாக இவ் ஆலயத்தினை மையப் படுத்தி உருவாக்கப்பட்ட பல்சமூக இணைவு மற்றும் பல்சமய இணைவு என்பனவும் அண்மைக் காலங்களில் வலு விழந்து செல்கின்றமையினை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக மக்கள் மத்தியில் காணப்படுகின்ற பிளவுகள் ஆலய நிகழ்வுகளிலும் பிரதிபலிப்பதனைக்

காணலாம். சமய ரீதியாகவும் சாதி ரீதியாகவும் பிளவுபட்டுள்ள இங்குள்ள மக்கள் தமக்குள் ஒற்றுமையாகச் செயற் படுவதனைக் காண்பது மிகவும் அரிதாகவே உள்ளது. மேலும் வேறு பிரதேசங்களில் இருந்து இங்கு வருகைதரும் மக்களுடைய எண்ணிக்கைகளும் மிகவும் குறைவடைந் துள்ளமையினையும் அவதானிக்க முடி கின்றது. இவ்வாறு வருகைதரும் குறைந் தளவிலான மக்களும் இங்குள்ள மக்களுடன் ஒன்றித்துச் செயற்படுவ தில்லை. ஆலயத்திற்கு வருகைதரும் மக்களினுடைய எண்ணிக்கை கணிசமான அளவு குறைவடைந்தமை, ஆலயத்தினை மையப்படுத்தித் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றிப்பு இன்று பெருமளவில் சிதைவடைந் துள்ளமை, திருவிழாக் காலங்களில் மட்டும் ஆலயத்தை மையப்படுத்திய விடயங்கள் பெருமளவிற்குக் கவனத்தில் கொள்ளப்படு கின்றமை, ஆலய வழிபாடுகளிலும், செயற் பாடுகளிலும் மக்கள் ஆர்வம் செலுத்தாமை, பாரம்பரியக் கலைகளில் விருத்தம் பாடும் மரபு மட்டுமே இன்றுவரை காணப்பட்டாலும் அதனை முன்னெடுப்பதில் ஆர்வம் காணப் படாமை என்பன யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்திய சமூக உருவாக்கத்தின் அண்மைக்கால தொய்வு நிலைக்கான அடையாளம் காணக்கூடிய சில எடுத்துக் காட்டுக்களாகும்.

### அண்மைக் காலத்தில் சமூக உருவாக்கம் வலுவிழந்து செல்கின்றமைக்கான காரணங்கள்

போர்த்துக்கேயருடைய காலப்பகுதியில் அடியிடப்பட்ட புனித யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்திய கிறிஸ்தவ சமூக உருவாக்கம் காலாகாலமாக இப்பகுதியில் நடைபெற்று வந்துள்ளது. பல நூற்றாண்டு களாக உருவாக்கப்பட்ட கிறிஸ்தவ சமூக உருவாக்கமானது அண்மைக் காலங்களில் மிகவும் வலுவிழந்து செல்வதனை அவதானிக்க முடியுமாகக் காணப்படுகின்றது. ஏறக்குறைய 'பதினைந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட இடப்பெயர்வு' இடப்பெயர்வு இவ் ஆலயத்தினை மையப்படுத்தி உருவாக்கப் பட்ட சமூகப் பாரம்பரியம் வலுவிழந்து செல்கின்றமைக்கான பிரதான காரணங் களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது. யுத்தத்தின் காரணமாக கி.பி.1995ஆம் ஆண்டுக்காலப் பகுதி முதற்கொண்டு இக் கிராமத்தினை விட்டு மக்கள் சிறிது சிறிதாக வெளியேற ஆரம்பித்துக் கொண்டனர். இவ் இடப்பெயர்வு கி.பி.1997ஆம் ஆண்டினுடைய முற்பகுதியில் அதிகரிக்கத் தொடங்கியது. இதன் காரணமாக கி.பி.1997ஆம் ஆண்டளவில் இப்பகுதியிலிருந்து மக்கள் முற்றும் முழுதாக இடம்பெயர்ந்து வேறு இடங்களில் குடியமர்ந்து கொண்டனர். இவ் இடப்பெயர்வானது ஏறக்குறைய 15 ஆண்டுக்காலம் நீடித்துக் கொண்டது. இவ் 15 ஆண்டுக்கால இடப்பெயர்வு மிகப் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது.

ஆலயத்தினை மையப்படுத்தித் தோற்று விக்கப்பட்ட கிறிஸ்தவ சமூக உருவாக் கத்திற்கு வலுச் சேர்ப்பித்தவையாக் காணப்பட்ட 'தேர்ப் பவனி மற்றும் ஏழு கூட்டுப் பவனி நடைபெறாமை' ஒரு காரண மாயமைந்தது. கி.பி. 1964ம் ஆண்டினைத் தொடர்ந்து ஏழு கூட்டுப் பவனியும் இடப் பெயர்விற்குப் பின்னரான காலப் பகுதியினைத் தொடர்ந்து தேர்ப் பவனியும் நடைபெறாத சூழல் காணப்படுகின்றது (கல்யாணி, 2021: 15). இதனால் மக்கள் மத்தியில் ஆலயத்தினை மையப்படுத்திய ஈடுபாடுகளும் ஆர்வமும் வெகுவாகக் குறைவடைந்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. மேற்கூறப்பட்ட சடங்குகள் மூலமாகத் தோற்றுவிக்கப்பட்ட கூட்டுப் பொறுப்புணர்வு, பகிர்வு, விசுவாசம், பாரம் பரியங்களின் தொடர்ச்சி என்பவை இன்று அழிவடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிராமத்தினைச் சூழக் காவல் அரண்களாக ஆலயங்களை அமைத்து அவற்றினுடைய பாதுகாப்பினில் வாழ்ந்த மக்களாக இம்மக்கள் காணப்படுகின்றனர். எனினும் தற்காலத்தில் இப் பகுதியில் வாழும் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற 'விசுவாசம் அதன் வீரியத்தினை வெகுவாகவே இழந்துள்ளமையினை' கண்கூடாகவே அவதானிக்க முடிகின்றது. இடப்பெயர்வும் அதனால் உண்டான இழப்புக்களும் இம்மக்களுடைய மனங்களில் ஆறாத வடுக்களாக மாற்றம் கண்டுள்ளமையானது கடவுள் பற்றிய நம்பிக்கையை ஆட்டம் காணச் செய்துள்ளது. இதன் காரணமாக இங்குள்ள மக்கள் மத்தியில் காணப்பட்ட ஆரம்பக்கால விசுவாச உறுதிப்பாடு இன்று பெருமளவில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளது. ஆலய வழிபாடுகளுக்கு வருகைதரும் மக்களின் எண்ணிக்கைகளில் ஏற்பட்டுள்ள கணிசமான அளவு வீழ்ச்சி இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக நோக்கத்தக்கது.

ஆரம்பக் காலப்பகுதிகளில் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் பெயர்பெற்ற இடங்களுள் ஒன்றாக இக் கிளாலி காணப்பட்டுள்ளது. இந் நிலையானது வலுவான கலை மற்றும் கலைஞர்களின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. எனினும் தற்காலத்தில் இந் நிலைமையானது பெரிதும் மாற்றமடைந்துள்ளமையினைக் காணமுடிகின்றது. அதாவது ஏறக்குறைய 15 ஆண்டுக்கால இடப்பெயர்வு வாழ்க்கை இம் 'மக்கள் மத்தியில் காணப்பட்ட கலை மீதான ஆர்வத்தினை நீர்த்துப்போகச் செய்துள்ளது' எனலாம். மேலும் யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகளால் இக் கலைகளில் ஆர்வம் கொண்ட மூத்த கலைஞர்கள் பலரும் மரணம் அடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறானதொரு சூழலில் இன்று பாரம்பரிய இசை, நாட்டுக்கூத்து போன்றவற்றுக்கான வரவேற்புக்களும் இங்குப் பெரிதளவில் காணப்படாத தன்மையே உள்ளது.

அண்மைக்காலத்தில் இக் கிராமத்தினை மையப்படுத்தியதாகக் காணப்படுகின்ற மிக முக்கியமானதொரு பிரச்சனையாக மக்கள் மத்தியிலான 'ஒற்றுமையின்மை' குறிப்பிடப்படுகின்றது. சமூகத்தில் மிகப்பெரும் பிரச்சனையாக அடையாளப்படுத்தப்படுகின்ற இப் பிரச்சனை சமூக உருவாக்கத்தின் வலுவிழப்பிற்கும் காரணியாக அமைகின்றது. இக் கிராமத்து மக்களை ஒன்றுபடுத்தும் மையப்புள்ளியாக இப் புனித யாகப்பர் ஆலயமே காணப்பட்டுள்ளது. எவ்வித பாகுபாடுகளும் பிரிவினைகளும் இன்றி இவ் ஆலயத்தில் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படும் நிலை அமையப் பெற்றிருந்துள்ளது. எனினும் தற்காலத்தில் அவ் ஒற்றுமை இம் மக்கள் மத்தியில் மரித்துப் போயுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது.

ஒரு சமூகத்தினுடைய பாரம்பரியங்களையும் தனித்துவங்களையும் எதிர்காலத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டியது மிகவும் அவசியமாகும். இவ் முக்கிய பொறுப்பு அச் சமூகத்தில் வாழும் இளம் தலைமுறையினருடைய கரங்களிலேயே காணப்படுகின்றது. எனினும் இக் கிராமத்தினையும் ஆலயத்தினையும் பொறுத்த வரையில் 'இளைஞர்களின் பங்குபற்றுதல் மிக மிகக் குறைவாகவே' காணப்படுகின்றமையினை அவதானிக்கலாம். இப் பகுதியில் இயல்பாகவே இளம் தலைமுறையினருடைய எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. எனினும் அவர்களுடைய ஒத்துழைப்பும் செயற்பாடுகளும் அதனை விட மிகக் குறைவாகவே தென்படுகின்றன.

## முடிவுரை

ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன்னர் கிளாலிப் பகுதியில் புனித யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்திய ஒரு கிறிஸ்தவ சமூக உருவாக்கம் வலுவாக நடைபெற்றுள்ளது. எனினும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட சமூக உருவாக்கம் தற்காலத்தில் வலுவிழந்து செல்கின்றமையினையும் ஆய்வு உறுதி செய்கின்றது. வலுவிழந்து செல்லும் சமூக உருவாக்க முயற்சிகள் மீண்டும் வலுப்பெற வேண்டியது காலத்தின் அவசியத் தேவையாக உள்ளது.

உள்நாட்டுப்போர் மற்றும் இடப்பெயர்வின் போது சிதைவுற்று அழிந்த நிலையில் காணப்பட்ட குறித்த பெரிய தேரினைப் போல் இல்லாவிடினும் மிகச் சிறிய அளவிலான தேர் ஒன்றினை மீண்டும் ஆலயத்தில் பயன்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகக் காணப்படுகின்றது. அண்மையில் பலகோடி ரூபாய் செலவில் புதியதொரு ஆலயம் இங்கு கட்டி முடிக்கப்பட்டமை மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும். அதனைப் போலவே புலம்பெயர்ந்து வாழும் குறித்த பங்கு ஆலயத்தைச் சார்ந்த மக்கள், பக்தர்கள், கிராமத்து மக்கள் எனப் பலரும் காலத்தின் தேவையினை உணர்ந்து தங்களால் இயன்ற பங்களிப்புக்களைச் செய்ய முற் படுவது அவசியமாக உள்ளது. அதனைப் போன்று கி.பி.1964ஆம் ஆண்டு காலப் பகுதியினைத் தொடர்ந்து யாழ்ப்பாண ஆயர் இல்லத்தினால் தடை செய்யப் பட்டுள்ள ஏழு கூட்டுப் பவனியை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். அதாவது ஆடம்பரக் கொண்டாட்டங்கள் தவிர்ந்த வகையில் ஆன்மீக வழியில் பக்திப் பவனியாக இப் பவனி சுற்றும் மரபினை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

ஆலயத்தினையும் ஆலயத்தினை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட சமூகப் பாரம்பரியத்தினையும் பாதுகாப்பதும் நீடித்து நிலைபெறச் செய்வதும் மிகவும் அவசியமாகும். அதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியமான அம்சங்களுள் ஒன்றாக இவ் ஆலயத்தினைப் பாதுகாக்கப் பட்ட தொல்பொருட் சின்னமாக அறிவிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. அதாவது போர்த்துக்கேயர்களுடைய வரலாற்றிலிருந்து தற்காலம் வரையான வரலாற்றினைச் சுமந்து நிற்கும் புராதன கட்டடமாக இவ் ஆலயம் அமைந்துள்ளது. இலங்கையினுடைய மிக முக்கியமான தொல்பொருள் மூலாதாரங்களுள் ஒன்றாக இது காணப்படுகின்றமை கவனிக்கத்தக்க தாகும். ஏறக்குறைய நானூறு ஆண்டுக்கால பாரம்பரியத்தினையும் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட கட்டடத்தினையும் கொண்ட இவ் ஆலயமும் இலங்கைத் தொல்பொருட் திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட்ட தொட்டுணரக் கூடிய மரபுரிமைச் சின்னமாக அறிவிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மைக் காலங்களில் இவ் ஆலயத்திற்கு வருகைதரும் யாத்திரிகர்களுடைய எண்ணிக்கை மிகக் கணிசமான அளவில் குறைவடைந்துள்ளமையினைக் காணக் கூடியதாயுள்ளது. இதற்கான காரணங்களுள் ஒன்றாக இவ்விடத்தில் தங்குமிட வசதிகள் மிகவும் குறைவாக உள்ளமையினைக் குறிப்பிடலாம். எனவே இவ் ஆலயத்திற்கு வருகைதரும் யாத்திரிகர்களுக்கான பாதுகாப்பான தங்குமிட வசதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். அவ்வாறு பாதுகாப்பான தங்குமிட வசதிகள் அமைத்துக் கொடுக்கப்படும் பட்சத்தில் மீண்டும் பல பாகங்களில் இருந்தும் யாத்திரிகர்கள் ஆர்வத்துடன் இவ் ஆலயத்தினை நோக்கி

வருகைதருவார்கள் என எதிர்பார்க்கக் கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைக்கு வருகைதந்த போர்த்துக் கேயர்கள் கத்தோலிக்க மறையினைப் பரப்புவதற்கு இசை, நாடகம் போன்ற கலை வடிவங்களைப் பயன்படுத்தியுள்ள மையினை அறிய முடிகின்றது. அதன் தொடர்ச்சியாகவே கிளாலிப் பகுதியிலுள்ள இப் புனித யாகப்பர் ஆலயத்திலும் பாரம்பரியக் கலை வடிவங்கள் மேடை யேற்றப்பட்டுள்ளமையினைக் காணலாம். எனினும் தற்காலத்தில் மேற்கூறப்பட்ட கலைகள் சுவடு இன்றிப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே மீளவும் இவ் ஆலயத்தினை மையப்படுத்தி திருவிழாக் காலங்களில் கலை நிகழ்வுகளை மேடை யேற்ற முயற்சிகளை மேற்கொள்வது சிறப்பானதாக அமையும். இவ்வாறு காணாமலாக்கப்பட்ட மேற்கூறப்பட்ட பாரம்பரியக் கலைகளை மீளவும் ஆலயத் திருவிழாக் காலங்களில் மேடையேற்று கின்ற போதே மக்கள் மறந்துபோன சமூகப் பாரம்பரியங்களை மீளவும் உயிர்ப்பிக்க முடியுமாகக் காணப்படும். கால ஓட்டத்தில் மக்களால் மறக்கப்பட்ட இப் பாரம்பரியக் கலைகளை மீளவும் இங்கு மேடையேற்று கின்ற போது அதன் வழியாக மக்களுடைய பாரம்பரிய வாழ்வியலையும் மீட்டெடுத்துக் கொள்ள முடியுமாக அமையும்.

**முடிவுரை**

போர்த்துக்கேயர்கள் இலங்கையில் கத்தோலிக்க சமயத்தினைப் பரப்பும் நோக்கில் பல பகுதிகளிலும் ஆலயங்களை அமைத்தனர். அவ்வாறு அமைக்கப்பட்ட ஆலயங்களுள் கிளாலியிலுள்ள புனித யாகப்பர் ஆலயமும் ஒன்றாகும். ஆலயங்கள் சமூக உருவாக்கங்களுக்கு மிகவும் அடிப்படையான அம்சங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றன. இதனடிப படையில் கிளாலியில் அமைக்கப்பட்ட புனித யாகப்பர் ஆலயத்தினை மையப் படுத்தியும் கிறிஸ்தவ சமூக உருவாக்கம் இடம் பெற்றுள்ளமையினை காண முடிகின்றது. கிறிஸ்தவ விசுவாசம், கூட்டுப் பொறுப்புணர்வு, ஒற்றுமை, பல்லின பண்பாடு, பகிர்வு போன்ற அம்சங்களை உள்ளடக்கிய சமூக உருவாக்கத்திற்கு யாகப்பர் ஆலயம் மிக முக்கிய காரணியாக அமைந்துள்ளது. குறிப்பாக ஆலயத்தினை மையப்படுத்தி நடைபெற்ற ஆன்மீக வழிபாடுகள், கிறிஸ்தவக் கலைகள், கிறிஸ்தவ சடங்குகள், கலாசார அம்சங்கள் என்பன சமூக உருவாக்கத்திற்கு வளமூட்டியவையாக அமைகின்றன. காலம் காலமாக வளர்க்கப்பட்ட கிறிஸ்தவ சமூக உருவாக்கம் அண்மைக் காலங்களில் மிகவும் வலுவிழந்து செல்கின்றமை கவனிக்கத்தக்கதாகும். ஏறக்குறைய பதினைந்து ஆண்டுக்கால இடப்பெயர்வு இக் கிராம மக்களுடைய வாழ்வில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலமாக மக்களுடைய விசுவாச வாழ்வில் பெரும் வீழ்ச்சியினை அவதானிக்க முடிகின்றது. கிளாலிப் பகுதி மக்கள் ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகள் புனித யாகப்பர் ஆலயத்தினைக் கண்களால் காணாது வேறு இடங்களில் ஏதிலிகளாக வாழ்ந்துள்ளனர். இந் நிலைமையானது ஆலயத்தினை மையப்படுத்திய கிறிஸ்தவ சமூக உருவாக்கத்தின் வலுவிழப்பிற்கு முக்கிய காரணியாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. ஆயினும் இங்கு சமூக உருவாக்கங்கள் மீளுருவாக்கம் செய்யப்பட்டு, தொடர்ந்து நிலைத்திருக்கச் செய்யப்பட வேண்டும். ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் சமூக உருவாக்கத்தின் மீளுருவாக்கத்திற்கும் நிலைத்திருப்பிற்கும் மிகவும் உதவியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாரம்பரியங்கள் தனித்துவமானவை என்பதன் அடிப்படையில் கிளாலி புனித யாகப்பர் ஆலயத்தினை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட கிறிஸ்தவ சமூகப் பாரம்பரியங்களும் தொடர்ந்து பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

### உசாத்துணை நூல்கள்


கல்யாணி, பா. (2021). "கிளாலி புனித சந்தியோகுமயோர் யாத்திரைஸ்தலம்", *கிளாலி மகிமையின் சுவடு*. கிளாலி: புனித யாகப்பர் யாத்திரைஸ்த்தலம்.

றோச், பி. (2021). "கிளாலிக் கிராமம்", *கிளாலி மகிமையின் சுவடு*. கிளாலி: புனித யாகப்பர் யாத்திரைஸ்த்தலம்.

பாக்கியநாதன், ம. (2021). "கிளாலியூர் புனித சந்தியோகுமையோர் ஆலய திருவிழாக் கால நிகழ்வுகளில் மறக்கப்பட்ட வரலாற்றுத் துளிகள்", *கிளாலி மகிமையின் சுவடு*. கிளாலி: புனித யாகப்பர் யாத்திரைஸ்த் தலம்.

ரூபன், ம. (2021). "அருகிப்போகும் அம்மானை இசை வடிவமும் ஈழத்தின் முதலாவது சந்தியோகுமையோர் அம்மானையும்", *கிளாலி மகிமையின் சுவடு*. கிளாலி: புனித யாகப்பர் யாத்திரைஸ்த்தலம்.

சாகர, ஜெயசிங்க. (2021). *வட இலங்கையிலுள்ள ஒரட்டோரியன் தேவாலயங்களின் மறைந்துவரும் பாரம்பரியங்களைத் தேடி*. நாவல்: ஆபு பதிப்பகம்.

பிலேந்திரன், ஞா. (2009). *போர்த்துக்கேயரின் இலங்கை வருகை*. யாழ்ப்பாணம்: ஆயர் இல்லம்.

பிலேந்திரன், ஞா. (2009). *போர்த்துக்கேய "பத்ருவாதோ" சில முக்கிய வரலாற்று பதிவுகள்*. யாழ்ப்பாணம்: ஆயர் இல்லம்.

றொபின்சன், அ. (2006), *சமூகவியல் கட்டுரைகள்*. யாழ்ப்பாணம்: பூபாலசிங்கம் பதிப்பகம்.

சண்முகலிங்கன், என். (2008), *சமூகவியல் கோட்பாட்டு மூலங்கள் அமைப்பும் இயங்கியலும்*. யாழ்ப்பாணம்: நாகலிங்கம் நூலாலயம்.

றமீஸ், ஏ. (2016), *சமூகவியல் சமூக மானிடவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. கொழும்பு: சேமமடு புத்தகசாலை.

யோன்பிள்ளை, அ. (2021). *சந்தியோகுமையோர் அம்மானை*. யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்.

கோணேஸ்வரன், சி. (1992). *சமூகவியல் சிந்தனைகள்,* யாழ்ப்பாணம்: மாவட்ட கூட்டுறவுத் திணைக்களம்.

வேலுப்பிள்ளை, க. (2004). யாழ்ப்பாண வைபவ கௌமுதி. சென்னை: ஏசியன் எடுக்கேசனல் சேர்வீசஸ்.

மேரி வினிபிரிடா, எஸ். (2022). *ஞானப் பள்ளு: இலக்கியம் -இறையியல் - வரலாறு*. மாத்தளை: ஆசிரியர் வெளியீடு.

Gnanaprakasar, S. (1999). *XXV Years' Catholic Progress*. Jaffna: St. Joseph's Catholic Press.


### கலந்துரையாடல் மற்றும் நேர்காணல்கள்

இருதயதாஸ், நீ. (வயது 57), புனித தோமையார் ஆலய செயலாளர், கிளாலி - 08.10.2024.

சுவீதின் யே, (வயது 28), புனித அந்தோனியார் ஆலயம், கிளாலி - 08.10.2024.

ஸ்ரனிஸ்லோஸ் அ, (வயது 84), புனித கண்மணி மாதா ஆலயம், கிளாலி - 12.10.2024.

ராசா செ, (வயது 77), புனித மிக்கேல் ஆலயம், கிளாலி - 12.10.2024.

அமலநாயகி, வி, (வயது 54), புனித தோமையார் ஆலயம், கிளாலி - 13.10.2024.

கனுதாசன் ஜெ, (வயது 28), கிளாலி - 10.11.2024.

மைக்கல் சவுந்தரநாயகம், அச்சுவேலிப் பங்குத்தந்தை - 14.12.2024.

நிதுஷா ஜீ, (வயது 19), மாணவி, கிளாலி - 2024.

வரதராசா ர, (வயது 76), முன்னாள் கிளாலி கடற்தொழிலாளர் சங்க தலைவர் - 2024.

தினேஸ்வரன் ச, (வயது 38), கிராம உத்தியோகத்தர், கிளாலி - 2024.

அகஸ்ரின் அ, (வயது 54), கிளாலி புனித யாகப்பர் ஆலய செயலாளர், மணற்காடு - 2024.